CC 186/2015

10.03.2026

அ.சா.12 ,

பெயர்: ரவி

த/பெ. சதாசிவம்

அ.சா.12 MP No.7/2026-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு சென்று நான் விசாரித்தேனா என்றால் 15.08.2014 ம் தேதி விசாரணை செய்தேன். விசாரணை செய்யும்போது கைரேகை நிபுணரை அழைத்து சென்றேனா என்றால் எனக்கு முன்னால் விசாரணை செய்த பொறுப்பு ஆய்வாளர் கூட்டி சென்றார்.

எதிரியின் கைரேகையை சம்பவயிடத்தில் இருந்த கைரேகையுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு தடயவியல் துறைக்கு பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தடயவியல் துறை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அரசு மதுபான கடையில் பாதுகாப்பு பெட்டகத்தை அதன் மேற்பார்வையாளர்தான் நிர்வகிக்க முடியும் என்றால் சரிதான்.

மேற்படி அரசு மதுபான கடையில் இருந்த பதிவேடுகளை நான் ஆய்வு செய்தேனா என்றால் ஆய்வு செய்தேன். புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அரசு மதுபான கடையில் இருந்ததா என்பது குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன், ஆனால் அதற்கான ஆவணம் அங்கு இல்லை. பதிவேடுகளை நான் பார்க்கவில்லையென்றால் சரியல்ல.

அரசு மதுபான கடையில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை நான் பார்வையிட்டேனா என்றால் கடையின் வெளிப்புற கண்காணிப்பு கேமராவைதான் பார்வை செய்தேன், உள்ளே உள்ள கண்காணிப்பு கேமராவை பார்க்கவில்லை. மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவின் எதிரியின் படம் தோன்றியதா என்றால் இல்லை. அரசு மதுபான கடைக்கு அருகில் இருந்த அடுமனையில் உள்ள கண்காணிப்பு கேமராவை பார்வையிட்டு விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

எதிரியிடம் தொகையை கைப்பற்றும்போது, அப்பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலரை அழைத்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. எதிரி எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ஜனவேலி, திருவாடனை, இராமநாதபுரம் மாவட்டம் ஆகும்.

ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளிடம் எதற்காக அச்சமயத்தில் அங்கு வந்தார்கள் என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரித்துள்ளேன். மொத்தமாக ரூ.3,16,000/- தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. மீதி தொகையை எதிரி என்ன செய்தார் என்று நான் விசாரணை செய்யவில்லையென்றால் சரியல்ல, அவர் சொந்த செலவு செய்ததாக கூறினார்.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் இருந்த இடம் யாருக்கு சொந்தமானது என்று விசாரணை செய்தேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி நபரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரியின் மகன் பொள்ளாச்சியில் வேலை செய்து வந்தார் என்றாலும், சந்தேகத்தின் அடிப்படையில் அவரை கைது செய்து, அவர் மீது பொய்யாக வழகக்கு புனையப்பட்டுள்ளது என்றாலும், உண்மையான எதிரியை விட்டுவிட்டு இந்த எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.